FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319439

1. District : மாவட்டம் **கடலூர்** PS: காவல்நிலையம் **ஊ.த.க. பிரிவு** Year: ஆண்டு **2026** FIR No.: மு.த.அ. எண் **8/2026** Date: நாள் **23.09.2026**

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018** Sections பிரிவுகள்: **7**
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் **22.09.2026** Date to : நாள் வரை **22.09.2026**
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் **15.00 hrs** Time to : நேரம் வரை **20.30 hrs**
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **23.09.2026** Time : நேரம் **16.00 hrs**
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - III** **கணினி தட்டச்சு** Time : நேரம் **16.00 hrs**

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: **சுமார் 25 கி.மீ. மேற்கு**
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி **வட்டாட்சியர் அலுவலகம், பண்ருட்டி, கடலூர் மாவட்டம்.**
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **V. மணிகண்டன்**
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் **ஆய்வுக்குழு ஆய்வாளர்**
(g) Address : முகவரி **மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மாவட்டம்.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

நான் இன்று 23.09.2026 ஆம் தேதி மாலை 16.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, V.மணிகண்டன், முதுநிலை வருவாய் ஆய்வாளர் அயல்பணி ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மாவட்டம் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு : அனுப்புநர் V.மணிகண்டன், முதுநிலை வருவாய் ஆய்வாளர், அயல்பணி ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். ந.எண்.க.IC–1/509/2026 நாள் :23.09.2026. ஐயா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலகம் – கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும்

(தொடர்ச்சி பக்கம்–4)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

23.9.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

23/09/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 23-09-2026 17.45 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் P. ANBALAGAN
Rank: நிலை Inspector No. எண் Police, VTAC, Cuddalore

தனித்தாள்

கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற.எண்.8/2026 ன் பக்கம் 1ல் வரிசை எண் 7ல் குற்றம்சாட்டப்பட்டவர்களின் முழுமையான விவரங்கள்.

(1) திரு.P.சந்திரன், வயது 43/2026, வருவாய் வட்டாட்சியர், பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம்.

(2) திருமதி. S.விஜயலட்சுமி, வயது 34/2026, க/பெ நந்தகோபால், முதுநிலை வருவாய் ஆய்வாளர் / உதவியாளர், A2 இருக்கை, வட்டாட்சியர் அலுவலகம், பண்ருட்டி, கடலூர் மாவட்டம்.

(3) திருமதி. M.ராஜலட்சுமி, வயது 43/2026, க/பெ கோபிநாத், முதுநிலை வருவாய் ஆய்வாளர் / உதவியாளர், B1 இருக்கை, வட்டாட்சியர் அலுவலகம், பண்ருட்டி, கடலூர் மாவட்டம்.

(4) திரு.G.ராஜசேகர், வயது 43/2026, த/பெ கோதண்டபானி, வட்டாட்சியரின் ஓட்டுநர் (Texco Private Ltd.), வட்டாட்சியர் அலுவலகம், பண்ருட்டி, கடலூர் மாவட்டம்.

(5) திரு.N.வினோத்ராஜ், வயது 36/2026, த/பெ நடராஜன், அலுவலக உதவியாளர், வட்டாட்சியர் அலுவலகம், பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம்.

ரொக்கப்பணம் ஒப்படைப்பு – நடவடிக்கை வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக. கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பேரிடர் மேலாண்மை பிரிவில் முதுநிலை வருவாய் ஆய்வாளர் அயல் பணி கடலூர் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் V.மணிகண்டன் ஆகிய நான் 22.09.2026 ஆம் தேதி எனது அலுவலகத்தில் இருக்கும் போது கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு பட்டா மேல்முறையீடு, ஆக்கிரமிப்பு அகற்றல் தொடர்பாக, பிறப்பு, இறப்பு சான்று போன்ற சேவைகளுக்காக வரும் பொதுமக்களிடம் பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலக ஊழியர்கள் லஞ்சம் பெறுவதாக ரகசிய தகவல் எனக்கு கிடைத்தது. பின்னர் உடனடியாக நான் புறப்பட்டு கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மதியம் சுமார் 1.30 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த காவல் ஆய்வாளர் பி.அன்பழகன் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 3.00 மணிக்கு மேல் சென்றால் அங்கு பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலக அலுவலர்கள் ஏற்கனவே பெற்று வைத்துள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், காவல் ஆய்வாளர் திரு. பி.அன்பழகன் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், காவல் ஆய்வாளர் திரு. பி.அன்பழகன் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மதியம் சுமார் 2.00 மணிக்கு அரசு வாகனத்தில் புறப்பட்டு பண்ருட்டி நகரில் பழைய நெய்வேலி சாலையில் கிழக்கு மேற்காக செல்லும் சாலையில், கிழக்கு திசையில் தெற்குபார்த்து அமைந்துள்ள பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சற்று தொலைவில் வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மாலை சுமார் 3.00 மணிக்கு தெற்கு பார்த்தவாறு உள்ள பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலத்தின் உள்ளே சென்று, வலது புறத்தில் மெயின் ஹாலில் மேற்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் ப.சந்திரன் (வயது 43), த/பெ.பழனிசாமி, தான் பண்ருட்டி வட்டாட்சியராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் என்னையும், ஆய்வாளரையும் மற்றும் காவல் குழுவினரையும் அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் அவரிடம் நான் மேற்படி அலுவலகத்தை, ஆய்வு செய்யப்போகும் விவரத்தை தெரிவித்து ஆய்வின்போது உடனிருக்குமாறு அறிவுறுத்தி, அவர் முன்னிலையில் நானும், எனது அறிவுரையின்படி காவல் ஆய்வாளர்

திரு.பி.அன்பழகன் மற்றும் காவல் குழுவினருடன் சுயபரிசோதனை செய்துகாண்பித்து எங்களிடம் பணமோ, பொருளோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டோம். பின்னர் அவரிடம் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பணியாளர்களின் ரொக்க கையிருப்பு பதிவேட்டை கேட்க, அவர் பணியாளர்களின் ரொக்க கையிருப்பு பதிவேட்டை எடுத்து ஆஜர் செய்தார். அப்போது என்னுடன் வந்த காவல் குழுவினர் உதவியுடன் வருவாய் வட்டாட்சியர் திரு.ப.சந்திரன் அவர்களை சோதனை செய்ய அவரிடம் ரூ.2100/– (500 x 4, 100 x 1) பணம் இருந்தது. ஆனால் அவர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனி நபர் ரொக்கப் பதிவேட்டில் பதிவு செய்யப்படாததால் அப்பணம் பற்றி அவரிடம் விசாரிக்க, தான் காலை அலுவலகம் வரும்போது எடுத்து வந்ததாக தெரிவித்தார். மேற்படி பணம் பற்றி தகுந்த முகாந்திரம் கூறாததால் அப்பணம் லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலகத்தில் பணியிலிருந்த அனைவரையையும் சோதனை செய்ததில், N.வினோத்ராஜ், (வயது 36), த/பெ.V.நடராஜன், அலுவலக உதவியாளர் என்றும், தான் நெ.7, புஷ்பா நகர், நெல்லிக்குப்பம் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும் கூறினார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.1,500/– (500 x 3) பணம் இருந்தது. மேற்படி பணம் பற்றி அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனி நபர் ரொக்க கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்யாததால், அப்பணம் பற்றி அவரிடம் விசாரித்தபோது அவர் சரியான முகாந்திரம் கொடுக்காததால், அப்பணம் லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி அப்பணம் ரூ.1,500/– கைப்பற்றப்பட்டது. மேலும், அவரது கைப்பேசியை வாங்கி G–Pay செயலியை பார்வையிட்டதில், 9944600180 என்ற கைப்பேசி எண்ணில் ஜூலை மாதம் முதல் தற்போது வரை ரூ.59,545/– சந்தேகத்திற்குரிய பண வரவு பரிவர்த்தணை செய்யப்பட்டது தெரியவந்தது. பின்னர் அவரது கைப்பேசியை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவருக்கு அருகில் நின்றிருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் G.ராஜசேகர், வயது 43, த/பெ.கோதண்டபாணி, தான் Ex.Serviceman என்றும், தற்போது Texco Private Ltd., மூலம் வட்டாட்சியர் அவர்களின் ஓட்டுநராக பணிபுரிந்து வருவதாகவும், மேலும் தான் நெ.1/10, கிழக்கு தெரு, இலையாண்டி கிராமம், பொம்பூர் அஞ்சல், வானூர் தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.1,000/– (500 x 2) பணம் இருந்தது. அப்பணம் பற்றி விசாரிக்க சரியான முகாந்திரம் கூறாததால், அப்பணம் லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி அப்பணம் கைப்பற்றப்பட்டது. மேலும், அவரது கைப்பேசியை வாங்கி G–Pay செயலியை

பார்வையிட்டதில், 9944343218 என்ற கைப்பேசி எண்ணில் Indian Overseas Bank கணக்கில் ஜூலை மாதம் முதல் தற்போது வரை ரூ.1,93,965/– சந்தேகத்திற்குரிய பண வரவு பரிவர்த்தணை செய்யப்பட்டது தெரியவந்தது. பின்னர் அவரது கைப்பேசியை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர், ஹாலின் தெற்கு புறத்தில் மேற்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் S.விஜயலட்சுமி, வயது 34, க/பெ. நந்தகோபால், முதுநிலை வருவாய் ஆய்வாளர்/ உதவியாளர் அ2 பிரிவு என்றும், தான் நெ.733, பிள்ளையார் கோயில் தெரு, முத்துகிருஷ்ணாபுரம், எழுமேடு அஞ்சல், பண்ருட்டி வட்டம் என்ற முகவரியில் வசித்து வருவதாக தெரிவித்தார். அவரை பெண் காவலர் கொண்டு மறைவிடத்தில் சோதனை செய்ய அவரிடம் ரூ.100/– இருந்தது. மேற்படி பணம் பற்றி விசாரிக்க அவர், அலுவலகத்திற்கு வரும்போது அவசர தேவைக்காக கொண்டுவந்தது என்று தெரிவித்ததால், மேற்படி பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், அவரது கைப்பேசியை வாங்கி G–Pay செயலியை பார்வையிட்டதில், 9080472073 என்ற கைப்பேசி எண்ணில் Canara Bank கணக்கில் ஆகஸ்ட் மாதம் முதல் தற்போது வரை ரூ.2,05,611/– சந்தேகத்திற்குரிய பண வரவு பரிவர்த்தணை செய்யப்பட்டது தெரியவந்தது. பின்னர் அவரது கைப்பேசியை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் ஹாலின் தெற்கு திசையில் மேற்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் M.ராஜலட்சுமி, வயது 43, க/பெ.கோபிநாத், முதுநிலை வருவாய் ஆய்வாளர் / B1 உதவியாளர் என்றும் தான் நெ.56, மகாலட்சுமி நகர், L.R.பாளையம், பண்ருட்டி தாலுக்கா என்ற முகவரியில் வசித்து வருவதாக தெரிவித்தார். அவரை பெண் காவலர் கொண்டு மறைவிடத்தில் சோதனை செய்ய அவரிடம் பணம் எதுவும் இல்லை. மேலும், அவரது கைப்பேசியை வாங்கி G–Pay செயலியை பார்வையிட்டதில், 9486777280 என்ற கைப்பேசி எண்ணில் ஜூலை மாதம் முதல் தற்போது வரை ரூ.2,25,100/– சந்தேகத்திற்குரிய பண வரவு பரிவர்த்தணை செய்யப்பட்டது தெரியவந்தது. பின்னர் அவரது கைப்பேசியை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் ஹாலின் கிழக்கு திசையில் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் S.கவிதா, வயது 37, க/பெ.சுரேஷ், Section Writer ஆக (Private Posting) பணிபுரிவதாகவும், தனக்கு மாதம் ரூ.10,000/– ஊதியமாக வட்டாட்சியர் அவர்கள் கொடுப்பார்கள் என்றும் தான் நெ.21, சக்கரத்தாழ்வார் நகர், அரிசிபெரியாங்குப்பம், கடலூர் என்ற முகவரியில் வசித்து வருவதாக தெரிவித்தார். அவரை பெண் காவலர் கொண்டு மறைவிடத்தில் சோதனை செய்ய அவரிடம் ரூ.60/– இருந்தது. மேற்படி பணம் பற்றி விசாரிக்க அவர், அலுவலகத்திற்கு வரும்போது அவசர

தேவைக்காக கொண்டுவந்தது என்று தெரிவித்ததால், மேற்படி பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அலுவலகத்தில் பணியிலிருந்து மற்ற பணியாளர்கள் தாங்கள் வைத்திருந்த பணத்திற்கு சரியான முகாந்திரம் தந்ததால், அப்பணம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் வட்டாட்சியரிடம் (1) பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலக வருகை பதிவேடு–2026 (2) தனி நபர் ரொக்க இருப்பு பதிவேடு ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர், 1) திரு. ப.சந்திரன், வருவாய் வட்டாட்சியர், பண்ருட்டி, 2) திருமதி.S.விஜயலட்சுமி, அ2 இருக்கை உதவியாளர், 3) திருமதி.M.ராஜலட்சுமி, B1 இருக்கை உதவியாளர், 4) திரு.G.ராஜசேகர், வட்டாட்சியரின் ஓட்டுநர் (தற்காலிகம்), 5) S.வினோத்ராஜ், அலுவலக உதவியாளர் 6) திருமதி.S.கவிதா, கணினி ஆப்பரேட்டர் (தனிநபர்) ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. திடீர் ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.4,600/– (500 x 9, 100 x 1) மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனையின்போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் ஆய்வு குழு சோதனை செய்த போது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை. மேலும் எங்களது மேற்படி ஆய்வின் போது அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு எந்தவித மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையிலோ நடந்து கொள்ளவில்லை. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜரை சம்பவ இடத்திலேயே மாலை சுமார் 03.00 மணிக்கு துவக்கப்பட்டு இரவு சுமார் 08.30 மணிக்கு முடிக்கப்பட்டது. 22.09.2026 ஆம் தேதி எனது தலைமையிலான திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.4,600/–, (1) பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலக வருகை பதிவேடு–2026 (2) தனி நபர் ரொக்க இருப்பு பதிவேடு ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர், 1) திரு. ப.சந்திரன், வருவாய் வட்டாட்சியர், பண்ருட்டி, 2) திருமதி.S.விஜயலட்சுமி, அ2 இருக்கை உதவியாளர், 3) திருமதி.M.ராஜலட்சுமி, B1 இருக்கை உதவியாளர், 4) திரு.G.ராஜசேகர், வட்டாட்சியரின் ஓட்டுநர் (தற்காலிகம்), 5) S.வினோத்ராஜ், அலுவலக உதவியாளர் 6) திருமதி.S.கவிதா, கணினி ஆப்பரேட்டர் (தனிநபர்) ஆகியோர்களது வாக்குமூலம், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் தயார் செய்யப்பட்ட திடீர் ஆய்வு மகஜர் ஆகியவற்றுடன் 1)திரு.ப.சந்திரன், வருவாய் வட்டாட்சியர், பண்ருட்டி, 2) திருமதி.S.விஜயலட்சுமி, அ2 இருக்கை உதவியாளர், 3) திருமதி.M.ராஜலட்சுமி, B1 இருக்கை உதவியாளர், 4) திரு.G.ராஜசேகர், வட்டாட்சியரின் ஓட்டுநர் (தற்காலிகம்), 5)

S.வினோத்ராஜ், அலுவலக உதவியாளர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் ---- (V.மணிகண்டன்), முதுநிலை வருவாய் ஆய்வாளர், அயல்பணி ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர்.

Madam Submitted,

Received the above computer typed complaint on 23.09.2026 at about 16.00 hours, hence I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption Cr.No.08/2026, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 23.08.2026 at 17.30 hours. sd/- xxxx 23/09/2026 (P.ANBALAGAN), Inspector of Police, V&AC, Cuddalore.

23/09/2026
(P. ANBALAGAN)
Inspector of Police
V&AC, Cuddalore.